பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 26 புதன்கிழமை 09.06.2021 கதிர் 82

## மேலும் 1,034 பேர் நேற்று மாட்டினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,034 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட கடந்த வருடம் ☞ 2

## புதிய பல்கலைக்கழகமாக வவுனியா வளாகம் அறிவிப்பு

### கல்வி அமைச்சு விசேட வர்த்தமானி

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைப் புதிய பல்கலைக்கழகமாக அறிவித்து கல்வி அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக சட்டங்களுக்கமைவாக 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரீஸின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.

இலங்கை, வவுனியா பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய பல்கலைக்கழகம் அழைக்கப்படும் என்றும், இதன்படி யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் ஜூலை 31 ஆம் திகதியுடன் இல்லாமல் செய்யப்படும் என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய வவுனியா பல்கலைக்கழகம் வியாபார கற்கைகள், பிரயோக விஞ்ஞானம், ☞ 2

## மேலும் பத்து இலட்சம் 'சினோபோர்ம்' தடுப்பூசி

### இன்று இலங்கை வந்தடைந்தது என்கிறார் இராஜாங்க அமைச்சர்



சீனாவில் இருந்து மேலும் பத்து லட்சம் 'சினோபோர்ம்' கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கை வந்தடைந்தன.

ஶ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் இன்று அதிகாலை ☞ 2

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் கைது!



யாழ்., காரைநகர் பகுதியில் வீடொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் ஊரி பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது என அப்பகுதி கிராம சேவையாளருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த வீடு முற்றுகையிடப்பட்டது.

அதன்போது வீட்டின் அறை ஒன்றினுள் கசிப்பு உற்பத்தி ☞ 2

## யாழில் கொரோனாவுக்கு முடிவுகட்ட அனைவரும் ஒத்துழைப்பு வழங்குக

### மாவட்ட அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் பயணத் தடை அமுலில் உள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் விவசாய விளைப்பொருள்களைச் சந்தைப் படுத்தல் தொடர்பில் இன்று முக்கிய கூட்டம் நடைபெற்றது. யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதன்பின்னர் யாழப்பாணத்தின் நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞ 2



## கொரோனா ஒழிப்பில் இராணுவத்தினர் செயற்பட்டால் இங்கு மக்கள் அழிவதை எவராலும் தடுக்கவே முடியாது

### கூட்டமைப்பின் எம்.பி. சார்ள்ஸ் இடித்துரைப்பு



இலங்கையில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் செயற்பட்டால் மக்கள் அழிவதை யாராலும் தடுக்க முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அரசின் பயணத்தடையால் கிடைத்த பலன் என்னவெனில், மக்களைப் பாதாளத்தில் தள்ளியது மட்டுமே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தடுப்பூசிகள் மூலம் மேற்குலக நாடுகள் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஆனால், இலங்கையால் இந்தக் கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய முடியாமைக்கு அரசின் ☞ 2

## எம்.பியாகின்றார் ஞானசார தேரர்?



அபே ஜனபல கட்சியின் நாடாளுமன்ற ஆசனத்துக்கு பொதுபலசேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரரை நியமிக்கும் திட்டம் இருக்கின்றது என அக்கட்சி தெரிவித்துள்ளது. ☞ 2

## தனிமைப்படுத்தலுக்காக மக்களை ஏற்றிவந்த பஸ் மோதி ஒருவர் சாவு



தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்துவதற்காகத் தென்னிலங்கையிலிருந்து மக்களை ஏற்றிவந்த ☞ 2

Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com

076 443 8622

நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் - 08இற்கான விஞ்ஞானப் பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப் பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தலுக்காக மக்களை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் மோதியதில் யாழ்ப்பாணத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று மாலை புத்தூர் - மட்டுவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

மட்டுவிலுக்கும் புத்தூருக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வயோதிபரே விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## புதிய பல்கலைக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்பவியல் கற்கைகள் ஆகிய பீடங்களை கொண்டிருக்கும் என்றும் கல்வி அமைச்சர் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளார்.

## எம்.பியாகின்றார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபே ஜனபல கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியலில் அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றம் சென்றுள்ள நிலையில், ஒப்பந்தத்தின்படி அவரது பதவிக் காலம் ஜூலை மாதம் 5 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது என அபே ஜனபல கட்சி குறிப்பிட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் அபே ஜனபல கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்றஆசனம்கிடைத்ததைத்தொடர்ந்து, யாரைப் நாடாளுமன்றம் அனுப்புவது என்ற உட்கட்சி முரண்பாடு ஏற்பட்டது.

இறுதியில், அத்துரலியே ரத்ன தேரர் 6 மாதங்களுக்கு நாடாளுமன்றம் செல்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

அத்துரலியே ரத்ன தேரருக்கு வழங்கப்பட்ட 6 மாத காலம் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதியுடன் நிறைவடைவதைத் தொடர்ந்து, ஞானசார தேரர் நாடாளுமன்றம் செல்லவுள்ளார் என்று அபே ஜனபல கட்சி தெரிவித்துள்ளது.

ஞானசார தேரரின் பெயரைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

## மேலும் 1,034 பேர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரை அந்தச் சட்டத்தை மீறிய 26 ஆயிரத்து 920 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கொரோனா ஒழிப்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திர கொள்கையின் பலவீனமே காரணமாகவுள்ளது.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டனை எதிர்த்து சீனாவின் பக்கம் இலங்கை நிற்பதால் கொரோனாத் தடுப்பூசிகளை இந்த நாடுகள் இலங்கைக்கு வழங்கப் பின்னடிக்கின்றன. முதலில் தடுப்பூசிகளை வழங்கிய இந்தியா தற்போது வழங்க மறுத்துவிட்டது.

கொழும்புத் துறைமுகக் கடல் பரப்பில் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிந்தபோது இலங்கை இந்தியாவின் உதவியைக் கேட்டது. ஆனால், இந்தியா முழு மனதுடன் உதவவில்லை. இந்தியா நினைத்திருந்தால் அந்தக் கப்பலின் தீயைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் தவறே இந்தியா இவ்வாறு வேண்டா வெறுப்பாக செயற்படக் காரணம் - என்றார்.

## கசிப்பு உற்பத்தியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றதைக் கண்டறிந்து, வீட்டில் இருந்தவரை ஊர்காவற்துறைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அத்துடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறைப்பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழில் கொரோனா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மேற்படி கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் விற்பனை செய்யப்பட்டு எஞ்சியுள்ள விவசாய உற்பத்திப் பொருள்களை மாகாணத்துக்கு வெளியே அல்லது வடக்கு மாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு எவ்வாறு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் அல்லது மொத்த வியாபாரிகளிடம் எவ்வாறு அதனைச் சேர்ப்பித்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

விவசாய உற்பத்திப் பொருட்களை அதிக அளவில் கொண்டுள்ள விவசாயிகளை எவ்வாறு மொத்த வியாபாரிகளுடன் இணைப்பது தொடர்பில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது குறித்து ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் 'நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிப்போம்' என்ற எண்ணக் கருவுக்கு அமைய சேதனப் பசளை மூலம் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் சேதனப் பசளை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கக் கையாள வேண்டிய உத்திகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இன்றைய கூட்டத்தின்போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற விரும்பும் விவசாயிகள் வடக்கு மாகாண விவசாய உதவிப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது - என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தனர்.


மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

47 ஆவது இதழ்

வாசகர்களின் அமோக வேண்டுதலுக்கு இணங்க இம்முறை செம்மணி வாரஇதழ் வழமை போன்று அச்சு வடிவில் உங்களை நாடி வருகின்றது.




உங்களுக்கு அருகிலுள்ள முகவர்களிடம் பத்திரிகையை பெற்றுக்கொள்ள முடியும்..!!

செம்மணி வார இதழை பெற விரும்புபவர்கள் 0764438622 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்..!!

வாசிக்கத் தவறாதீர்கள்

ஒலிம்பிக் எங்களைக் கொல்லும்

கொரோனாவை பரப்பியோர் வேற்றுக்கிரகவாசிகளா?

யாழ்ப்பாணத்தில் விளைந்தது கறுவா

தடுப்பூசியும் அரசியலும்

"கொரோனாவை வெற்றி கொள்ள அவதானத்துடன் செயற்படுங்கள்"

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# புதிய உலக ஒழுங்கு

உலகில் எதுவும் சாசுவதமான அல்ல. எல்லாமே, எப்போதுமே மாறிக் கொண்டுதான் இருக்கின்றன.

புதிய உலக ஒழுங்கும் கூட அப்படித்தான். அதுவும் மாறிக் கொண்டுதான் இருக்கின்றது. புதிய உலக ஒழுங்குக்கான வரலாற்றுப் படலம் சத்தம் சந்தடியின்றிக் கட்டவிழ்ந்து கொண்டிருக்கின்றது.

உலக வல்லாதிக்க சக்திகளின் நோக்கங்களுக்கும், தேவைகளுக்கும், விருப்புகளுக்கும் ஏற்ப இந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த மாற்றங்களை – நிகழ்வுப் போக்குகளை – புரிந்து கொண்டு, சேர்ந்து ஓடுகின்ற சிறிய நாடுகள் தப்பிப் பிழைத்து மீண்டு வருகின்றன. நிலைமை புரியாமல் முரண்டு பிடித்து, எதிர் நீச்சல் போட முயலும் சிறிய நாடுகள் பட்டழிந்து குட்டிச் சுவராகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இலங்கைக்கும் – இலங்கை இனப் பிரச்சினை விடயத்துக்கும் – கூட இது பொருந்தும். உலக ஒழுங்கின் நிலைமைகளைப் புரிந்து கொண்டு அதற்கு ஒத்திசைந்து போக நாம் முற்படாதமையின் விளைவுகளை நாம் படித்துக் கொண்டோம். பட்டறிவாகப் பெற்றோம்.

புதிய உலக ஒழுங்கு விடயத்தில் நாம் தவறு செய்யாவிட்டாலும் – தவறு செய்ய முற்படாவிட்டாலும் –அந்த ஒழுங்குக் கட்டுமானத்துக்கு இசைவான திசையில் நாம் நிற்கத் தவறும் போது தேவையற்ற பிரளயங்களை நாம் சந்தித்து எதிர்கொண்டு அழிவது வரலாற்று நியதியாக நம் மீது சுமத்தப்படும். இதுவே எமது அனுபவப்பாடம்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திலும் உலகப் பார்வை – உலகக் கருத்து நிலைக்கு செல்நெறி இப்போது மாறி வருகிறது. புதிய நிலையில் அது நகர்கின்றது. அதை நாம் புரிந்து கொண்டு நிலையெடுக்க வேண்டும்.

இலங்கை இனப் பிரச்சினைக்கான ஆடுகளம் பழையதுதான். ஆனால் அதைச் சூழ நிகழ்ந்து விட்ட மாற்றங்கள் புதியவை. ஆட்டம் பழையதுதான். ஆனால் ஆடும் முறைகள், தந்திரோபாயங்கள், உத்திகள் புதியவை. ஆட்ட அணிகள் பழையவைதான். ஆனால் அவை சேர்ந்திருக்கும் கூட்டாளிகள் – பக்கபலமானவர்கள் – புதியவர்கள்.

முன்னொரு காலம் நம் இனப் பிரச்சினையில் வல்லாதிக்க சக்தியாக தலையீடு கொண்டிருந்த இந்தியா, ரஷ்யாவுடன் கூட்டமைத்திருந்தது. அமெரிக்காவோ, இந்தியாவின் எதிரி தேசமான பாகிஸ்தானை அரவணைத்திருந்தது.

ஆனால் இன்று நிலைமை மாற்றம். அமெரிக்காவும், இந்தியாவும் ஏறக்குறைய ஒரே பக்கத்தில் நிற்கின்றன. அதுவும் இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர்களுக்கு எதிர்த் தரப்பில் இருக்கும் கொழும்பிலிருந்து அமெரிக்க – இந்தியக் கூட்டு முன்னெச்சரிக்கைப் பாதுகாப்போடு சற்றுத் தள்ளியே நிற்கின்றது.

கொழும்பு அரசோ இந்திய – அமெரிக்கத் தரப்புகளுக்கு மாறான பக்கத்தில் – சீனாவுடன் – கூட்டமைத்துச் செயற்படும் விதத்தில் மாற்றார் பக்கத்தில் நிற்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் உட்பட சர்வதேச அரங்குகளில் கொழும்பு ஆட்சிப் பீடத்தை வட்டமிட்டு வியூகம் அமைக்கும் செயற்பாடுகளில் அமெரிக்க – இந்தியக் கூட்டு தீவிர முனைப்புக் காட்டுகின்றது.

கனிந்து வரும் இச்சூழலை இலாவகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புத் தமிழர்களுக்கு உரியது.

மத்திய கிழக்கிலும் பிற இடங்களிலும் தன் நேச நாடுகளின் தரப்புகளுக்கு உலப் பெரும் சக்தியான அமெரிக்காவே தலைமை வகித்தது. வகிக்கின்றது.

அதுபோல இந்தோ – பசுபிக் பிராந்தியத்திலும் தனது வலிமையை நிலைநிறுத்தி உறுதிப்படுத்துவதை விரும்பும் அமெரிக்கா, அந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புகின்றது.

ஆனால் பிற இடங்களில் மேற்குலகின் பிரதான சக்திகள், நாடுகள் எல்லாம் அமெரிக்காவுக்கு அடங்கி அதன் தலைமைத்துவத்தை ஏற்றமைபோல இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் நிலைமை இல்லை.

இந்தப் பின்புலத்தில் அமெரிக்காவை நேச சக்தியாக அரவணைத்துக் கொள்ள பாரதம் தயார். ஆனால் அதனை அமெரிக்காவின் தலைமையாக ஏற்க இந்தியா எப்போதுமே தயாரில்லை.

இந்தோ – பசுபிக் பிராந்திய நிலைப்பாட்டில் இந்தியாவின் மேன்மை நிலைக்குக் கீழ் தலைமைக்குக் கீழ் ஒன்றித்துப் போனால்தான் இந்த நேச சக்தி நிலைமை நீடிக்கும் என்பது அமெரிக்கா புரிந்து கொண்ட யதார்த்தம்.

அதனால்தான் புதிய உலக ஒழுங்கு கட்டவிழ்கின்றது என்றோம்.

அதனைப் புரிந்து கொண்டு இனிமேல் நாம் காய்களை நகர்த்த வேண்டும். தமிழர் தலைவர்களுக்கு இந்தக் களயதார்த்தம் புரிந்தால்சரி.

# தடுப்பூசிக்கு ஆயிரம் ரூபா அறவீடாம் சரத் பொன்சேகா அதிர்ச்சித் தகவல்



கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட சிலரிடம் 1,000 ரூபா கட்டணம் அறவிடப்பட்டதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த 1,000 ரூபா கட்டணத்தை வழங்கிய பலர் இது தொடர்பில் தன்னிடம் தகவல் வழங்கியுள்ளனர் எனவும் இந்த விடயம் தொடர்பாக விசாரணை அவசியம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு கருத்துக்களை தெரிவித்து அரசாங்கத்தின் தடுப்பூசி திட்டத்தை நாசப்படுத்தும் நோக்கம் தமக்கு இல்லை எனத் தெரிவித்த சரத் பொன்சேகா, இந்த நடவடிக்கை ஒரு பயனுள்ள முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணம்; 21 பேர் சாவு; 43,890 குடும்பங்கள் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்துள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் குருநாகல் (2), கேகாலை (5), களுத்துறை (3), புத்தளம் (2), கொழும்பு (1), இரத்தினபுரி (3), காலி (1) மற்றும் கம்பஹா (4) மாவட்டங்களில் இந்த இறப்புகள் பதிவாகியுள்ளன.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் இன்று காலை வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, பத்து மாவட்டங்களில் 43 ஆயிரத்து 890 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 72 ஆயிரத்து 132 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, புத்தளம், களுத்துறை, நுவரெலியா, கேகாலை, கண்டி, குருநாகல் மற்றும் காலி மாவட்டங்களில் உள்ள மக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சீரற்ற வானிலை காரணமாக ஐந்து பேர் காயமடைந்துள்ளமையுடன் இரண்டு பேரைக் காணவில்லை என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அந்த அறிக்கையின்படி, 21 வீடுகள் முற்றிலுமாகவும் 1,095 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ள அதேவேளை 694 குடும்பங்களைச் சேர்ந்த 2,689 பேர் 60 பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

# மருத்துவ ஆலோசனை இல்லாமல் ஒக்சிஜனை வழங்க வேண்டாம்



மருத்துவ பரிந்துரைகள் இல்லாமல் நோயாளிகளுக்கு ஒக்சிஜனை வழங்குவதைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் ஊடாகப் பேச்சாளர் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயம் தொடர்பாக அறிவித்துள்ளார்.

மருத்துவ பரிந்துரை இல்லாமல் அதிக ஒக்சிஜன் வழங்கப்பட்டால், பாதகமான நிலைமை ஏற்பட அதிக ஆபத்து உள்ளது எனக் கூறினார்.

கொரோனா வைரஸ் காரணமாக சிகிச்சை நிலையங்களுக்கு ஒக்சிஜனுக்கான தேவை அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நோயாளிகளுக்கு முன்கூட்டியே சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஒக்சிஜனுக்கான தேவையும் அதிகரித்துள்ளது என வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டினார்.

# யாழ். மாவட்ட மின்னியலாளர்களின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம்!

தேசிய இரத்த மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு அமைய யாழ். மாவட்ட மின்னியலாளர்களின் ஏற்பாட்டில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் யாழ் மாவட்ட லயன்ஸ் கழகங்கள் ஆகியன இணைந்து இரத்ததான முகாமொன்றை யாழ்.மாவட்டத்தில் நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஜுலை மாதம் முதலாம் திகதி காலை 8 மணி முதல் இந்த முகாம் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மக்கள் உயிர்க்காக்கும் இரத்ததான நிகழ்வில் பங்குபற்றுமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் யாழ் மாவட்ட லயன்ஸ் கழகங்கள் ஆகியன இணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

தற்போது நாட்டில் நிலவும் பயணத்தடை காரணமாக இந்த இரத்ததான நிகழ்வில் கலந்துக்கொள்ள விரும்புவோர் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் (077 039 9119) முன்கூட்டியே தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அதற்கான ஏற்பாடுகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் யாழ் மாவட்ட லயன்ஸ் கழகங்கள் ஆகியன மேற்கொள்ளும் என அதன் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# 5 குழந்தைகளுக்கு யாழில் கொரோனா

யாழ்ப்பாணத்தில் ஒரு மாதத்துக்கு உட்பட்ட 3 குழந்தைகள் உள்ளிட்ட 5 குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் – பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தனிமைப் படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட, பிறந்து 12 நாள்களேயான குழந்தை ஒன்றுக்கு ம் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அதேபோன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பிறந்து 20 நாள்களேயான குருநகர் பகுதியைச் சேர்ந்த குழந்தை ஒன்றுக்கும் அதன் தாய்க்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், முதிராக் குழந்தைகளுக்கான அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள 29 நாள்களேயான குழந்தை ஒன்றுக்கும் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 9 மாதக் குழந்தை ஒன்றுக்கும் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 10 மாதக் குழந்தைக்கும் அதனது பெற்றோருக்கும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# நியூட்ரினோ திட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழக அரசு அனுமதிக்கக்கூடாது - வைகோ



'தமிழ்நாட்டின் உரிமைகளையும், தமிழ் மக்களின் உணர்வுகளையும் மதிக்காமல், மத்திய அரசு நியூட்ரினோ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகின்றது' என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்துவைகோவெளியிட்டுள்ளஅறிக்கையில், 'இந்த உலகில் பழம்பெருமை மிக்க இடங்களுள் ஒன்றாக, ஐ.நா. மன்றம் அறிவித்து இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலை தமிழ்நாட்டின் நீர் ஆதாரமாகத் திகழ்கின்றது. ஆனால், கடந்த ஒரு நூற்றாண்டாக அங்கே கடுமையான ஆக்கிரமிப்புகள் நடைபெற்றுள்ளன.

யானைகளின் காட்டு வழித் தடத்தை மறித்துக் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான சுற்றுலா விடுதிகளை முழுமையாக இடித்துத் தகர்க்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கின்றது. இந்த நிலையில், தேனி மாவட்டம் பொட்டிப்புரம் கிராமத்தில் உள்ள அம்பரப்பர் மலையில் லட்சக்கணக்கான தொன் கருங்கற் பாறைகளை வெட்டி எடுத்து குகை குடைந்து, அங்கே நியூட்ரினோதுகள்கள்குறித்துஆராய்ச்சிசெய்வதற்காக ஆராய்ச்சி மையம் அமைக்கும் முயற்சியில் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து இந்திய மத்திய அரசு தீவிரம் காட்டி வருகின்றது.

இதனால் முல்லைப் பெரியாறு, இடுக்கி ஆகிய அணைகளில் விரிசல் ஏற்படும். சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கும் இந்தத் திட்டத்தை உள்ளூர் மக்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், அரசியல் கட்சிகளும் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்றை எதிர்த்து பூவுலகின் நண்பர்கள் சார்பில் தேசிய பசுமைத் தீர்ப்பு ஆயத்தில் தொடரப்பட்ட வழக்கில் 2018 இல் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கிய சுற்றுச்சூழல் சான்று செல்லும் என்றும் ஆனால், தேசிய காட்டு உயிர் வாரியத்தின் தடை இன்மைச் சான்று பெறாமல் (NBWL) திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது எனவும் கூறப்பட்டிருந்தது.

திட்டத்திற்கு வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் சான்று செல்லும் என்ற பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த மேல் முறையீடு, விசாரணையில் இருக்கின்றது. இந்த நிலையில், கடந்த மே 20ஆம் திகதி இத்திட்டத்திற்கான காட்டு உயிர்கள் பாதுகாப்பு வாரியத்தின் தடையின்மைச் சான்றினை வழங்கக் கோரி, தமிழ்நாடு அரசின் வனத்துறையிடம் TATA INSTITUTE OF FUNDAMENTAL RESEARCH விண்ணப்பித்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால், மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் அதைச் சுற்றியுள்ள அணைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின்படி, இத்திட்டத்தை, Category A யின் கீழ்தான் பரிசீலிக்க முடியும் என்று அப்போதைய மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) கூறிய போதிலும் திட்டத்தை வெறும் கட்டுமானம் கட்டும் பிரிவில் அதாவது, Category B என மாற்றி தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்று அறிவித்து மத்திய அரசே நேரடியாக சுற்றுச்சூழல் சான்று வழங்கி இருந்தது. தமிழ் நாட்டின் கேரள எல்லையில் உள்ள மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவின் தமிழ்நாட்டுப் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியை மட்டும் தவிர்த்து விட்டு, பிற பகுதிகள் அனைத்தையும் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவும் மத்திய அரசு அறிவித்தது.

இப்படி தமிழ்நாட்டு அரசின் முடிவையும் மக்களின் எதிர்ப்பையும் மீறி இத்திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த முனைகின்றது. தமிழகத்தின் நீர் ஆதாரமாகத் திகழ்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கேடு விளைவிக்கும் இந்தத் திட்டத்தை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்குத் தொடுத்தேன். அதற்கு அரசுத் தரப்பில் தடையின்மைச் சான்று (Clearance Certificate) வாங்கவில்லை என பதில் மனு தாக்கல் செய்திருந்தனர். ஆகவே, நீதிமன்றம் தடை ஆணை வழங்கி உள்ளது.

எனவே, காட்டு உயிர்களுக்குக் கேடு இல்லை என, மாநில அரசிடம் சான்று கோரி இருக்கின்ற விண்ணப்பத்தை தமிழ்நாடு அரசு ஏற்கக் கூடாது ஏற்கெனவே வழங்கப்பட்ட வனத்துறை சான்றையும் திரும்பப் பெற வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்கின் விசாரணையில் தனது நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துரைத்து சுற்றுச்சூழல் சான்றுக்குத் தடை விதிக்கும் தீர்ப்பைப் பெறவும், தமிழ் நாடு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் உரிமைகளையும் தமிழ் மக்களின் உணர்வுகளையும் மதிக்காமல் மத்திய அரசு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகின்றது. எனவே, இந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு வழங்கிய நிலத்தையும் திரும்பப்பெற வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் கடனைச் செலுத்த போதிய அவகாசம்

## 12 மாநில முதல்வர்களுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம்



கொரோனாப் பெருந்தொற்றால் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில்கொண்டு, குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு கடனாளர்கள், இரு காலாண்டுகளுக்கு கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் கால அவகாசம் வழங்குவது தொடர்பாக மத்திய நிதி அமைச்சர் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ஆகியோரை வலியுறுத்த வேண்டுமெனக் கோரி, 12 மாநில முதலமைச்சர்களுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்வதற்கான மிகச்சரியான ஒற்றைப் பேரமைப்பாக மத்திய அரசே செயல்பட வேண்டும் என்னும் கருத்தினை மாநில முதலமைச்சர்கள் பலர் சுட்டிக்காட்டினோம் என்றும், ஒன்றிய அரசே முழு அளவில் தடுப்பூசிகளை கொள்முதல் செய்து அனைத்து மாநிலங்களுக்கும் இலவசமாக வழங்க வேண்டும் என்றும் நாம் வலியுறுத்திய நிலையில், நம் அனைவரின் கூட்டு முயற்சிகளின் காரணமாக, பிரதமர் தனது முந்தைய கொள்கையை நேற்று மாற்றியமைத்துள்ளார் என்றும் மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில் கடனாளர்களை, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் சிறு கடனாளர்களை கொரோனாப் பெருந்தொற்றின் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளின்போது வெவ்வேறு வழிமுறைகளில் கையாளும் பிரச்சினை தொடர்பாக அனைத்து மாநில அரசுகளும் மீண்டும் ஒன்றிணைய வேண்டியது அவசியமென அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2021 ஏப்ரல் - ஜூன் மாதங்களில் உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில், அந்தந்த மாநில அரசுகளால் ஊரடங்குகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில், கொரோனாப் பெருந்தொற்றின் முதல் அலையின்போது கடனாளர்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம் போன்ற நிவாரணம் தற்போது அளிக்கப்படவில்லை. இதனால், கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைத் தள்ளிவைத்து, கூடுதல் கால அவகாசம் அளிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ஒன்றிய அரசின் கவனத்திற்கு தாம் கொண்டு சென்றுள்ளோம் எனவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

'எனவே, ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, 5 கோடி ரூபா வரையில் நிலுவைகளைக் கொண்டுள்ள அனைத்துச் சிறு கடனாளர்களுக்கும், குறைந்த அளவு 2021 - 2022 ஆண்டின் முதல் இரு காலாண்டுகளுக்காவது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் கால அவகாசம் அளிக்க வேண்டும். இதனை, ஒன்றிய நிதி அமைச்சர் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ஆகிய இருவரின் கவனத்திற்கும் கொண்டு செல்ல வேண்டுமென முதலமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று அக்கடிதத்தில் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். 'இக்காலக் கட்டத்தில் நமது கூட்டு வலிமையை நாம் மீண்டும் வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும்' எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# உத்தரப்பிரதேச வாகன விபத்தில் 17 பேர் உயிரிழப்பு



உத்தரப்பிரதேசத்தில் சிறிய ரக சரக்கு வாகனத்தில் அரசுப் பேருந்து மோதிய விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

கான்பூர் அருகே சச்சேந்தி என்ற இடத்தில் மூன்று சக்கர சிறிய ரக சரக்கு வாகனத்தில், அகமதாபாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசு சொகுசுப் பஸ் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் பஸ் பயணிகள் உள்ளிட்ட 17 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாய முற்றனர். மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாவும் காயமுற்றோருக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் உதவித் தொகையாக வழங்கப்படுமென்று அறிவித்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபா உதவித்தொகை வழங்கப்படும் என உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தும் அறிவித்துள்ளார்.

# இந்திய அரசின் விதிக்குக் கட்டுப்படுவதாக டுவிட்டர் நிறுவனமும் அறிவித்துள்ளது

சமூக வலைத்தளங்களில் போலிச் செய்திகள் பரப்பப்படுகின்றமையைத் தடுக்கவும், இந்திய இறையாண்மைக்கு எதிரான கருத் துக்கள் பகிர்வதைத் தடுக்கும் நோக்கிலும் சமூக ஊடகங்கள் மற்றும் ஓடிடி தளங்களுக்கு புதிய வழிகாட்டு விதிகளை இந்திய மத்திய அரசு கொண்டுவந்தது.

டுவிட்டர், பேஸ்புக், வட்ஸ் அப் போன்ற சமூக ஊடக நிறுவனங்கள் ஒவ்வொன்றும் இந்தியாவில் தனியாக குறை தீர்ப்பு அதிகாரி ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் போன்ற புதிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப விதிகளை கடந்த பெப்ரவரி மாதம் இந்திய மத்திய அரசு அமுல்படுத்தியது. குறித்த அதிகாரியின் பெயர், தொடர்பு முகவரி போன்ற தகவல்களை மத்திய அரசிடம் தெரிவிக்க வேண்டும் எனவும் இதற்கென காலக்கெடுவையும் நிர்ணயித்தது.

இந்திய அரசு நிர்ணயித்த காலக்கெடு கடந்த மே மாதம் 26 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், பேஸ்புக், வட்ஸ் அப், கூகுள் போன்ற நிறுவனங்கள் மத்திய அரசின் புதிய சட்ட விதிகளை ஏற்பதாக அறிவித்தன. ஆனால், டுவிட்டர் நிறுவனம் தொடர்ந்து காலதாமதம் செய்து வந்தது. இதனையடுத்து டுவிட்டர் நிறுவனத்திற்கு நினைவூட்டல் நோட்டீஸ்களை இந்திய அரசு அனுப்பிய நிலையில், இறுதியாக வாய்ப்பு வழங்கும் விதமாக நோட்டீஸ் ஒன்றையும் அனுப்பியது.

இந்திய அரசின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளை ஏற்றுக்கொள்வதாக டுவிட்டர் நிறுவனம் கூறியுள்ளது. டுவிட்டரின் முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதென்றாலும், புதிய விதிகளை நடைமுறைப்படுத்த கூடுதல் கால அவகாசத்தை இந்திய அரசிடம் டுவிட்டர் நிறுவனம் கேட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தற்போது கொரோனா பெருந்தொற்று காலம் என்பதால் புதிதாக அதிகாரிகளைப் பணியமர்த்த போதிய காலம் தேவை எனவும் டுவிட்டர் நிறுவனம் தகவல் தெரிவித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஐ.நா.பொதுச்செயலாளராக

# ஆன்டனியோ குட்டரெஸ் மீண்டும் தேர்வானார்

ஐ.நா.சபையின் 9 ஆவது பொதுச்செயலாளராக போர்த்துக்கல் முன்னாள் பிரதமரான ஆன்டனியோ குட்டரெஸ் (72) கடந்த 2017 ஆம் ஆண்டு 1 ஆம் திகதி முதல் பதவி வகித்து வருகிறார். இவரது பதவிக்காலம் இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் நிலையில், ஐ.நாவின் அடுத்த பொதுச்செயலாளரை தேர்வு செய்யும் பணிகள் நடந்து வந்தது.

இந்நிலையில், நேற்று நடந்த ஐ.நாவின் அதிகாரம் மிகுந்த பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டத்தில் ஆன்டனியோ குட்டரெஸையே மீண்டும் பொதுச்செயலாளராக்குவது என ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, ஐ.நாவின் அடுத்த பொதுச் செயலாளராக மீண்டும் ஆன்டனியோ குட்டரெஸே தேர்வாகிறார்.



வரும் 18 ஆம் திகதி நடைபெறும் ஐ.நாவின் பொதுச்சபைக் கூட்டத்தில் முறைப்படி அவர் தேர்வு செய்யப்படுவார். அவரது பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஜனவரி 1 முதல் 2026 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தொடரும்.

## ஐ.நா. பொருளாதார கவுன்சில் உறுப்பினராக இந்தியா தேர்வு

சர்வதேச அளவில் சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் ஆகிய 3 பரிமாணங்களில் நீடிக்கத்தக்க வளர்ச்சியை மேம்படுத்த ஐ.நா. சபையின் ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலில் செயல்பட்டு வருகிறது.

54 உறுப்பு நாடுகளைக் கொண்ட இந்த கவுன்சிலில் ஐ.நா. அமைப்பின் இதய பகுதியாக கருதப்படுகிறது.

மேலும் ஐ.நா. சபையின் சார்பில் நடைபெறும் உச்சி மாநாடுகள் மற்றும் இதர மாநாடுகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை செயல்படுத்துவதில் இந்த கவுன்சிலில் முக்கிய பங்காற்றுகிறது.

இந்த நிலையில் 2022 முதல் 2024 வரையிலான கால கட்டத்துக்கான ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலின் உறுப்பு நாடுகளை தேர்வு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது.



இதில் ஆசிய பசுபிக் நாடுகளின் பிரிவில் இந்தியா உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டது. இதே பிரிவில் இந்தியாவுடன் ஆப்கானிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளும் தேர்வு செய்யப்பட்டன.

இதனிடையே ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலுக்கு இந்தியாவை தேர்வு செய்ததற்காக ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு ஐ.நாவுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி நன்றி தெரிவித்துள்ளார்.



சீனாவின் யுனான் மாகாணத்தில் வனப்பகுதியில் காட்டு யானைகள் படுத்து உறங்கும் காட்சிகள் வெளியாகியுள்ளது. வனப்பகுதியில் போதிய உணவு கிடைக்காததால் நகருக்குள் சுற்றித்திரிந்து வருகின்றன. இந்நிலையில் அந்த யானைக்கூட்டம் அசதியால் வனப்பகுதியில் படுத்து உறங்கும் காட்சிகள் ட்ரோன் கமரா மூலம் படம்பிடிக்கப்பட்டுள்ளது.

## மியன்மாரில் ஆங் சான் சூகி மீதான வழக்கு அடுத்த வாரம் விசாரணை தொடங்குகிறது

மியன்மாரில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கடந்த பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி இராணுவம் கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. மேலும் நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை இராணுவம் கைது செய்து வீட்டுக் காவலில் வைத்தது.

இதில் ஆங் சான் சூகி மீது, தகவல் தொடர்பு சாதனங்களை சட்ட



விரோதமாக இறக்குமதி செய்து வைத்திருந்தது. தேசிய பேரிடமேலாண்மைச் சட்டத்தை மீறியது காலணித்துவ கால அதிகாரபூர்வ ரகசிய சட்டத்தை மீறியது உள்பட 6 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச் சாட்டுகள் அனைத்தும் ஆங் சான் சூகியை இழிவு படுத்துவதற்கும் இராணுவ ஆட்சியை நியாயப்படுத்துவதற்கும் அரசியல் உள்நோக்கத்துடன் பொய்யாக புனையப்பட்டவை என ஆங் சான் சூகியின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இந்த நிலையில் ஆங் சான் சூகிக்கு எதிரான வழக்கு விசாரணையை இராணுவ அரசு அடுத்த வாரம் (14 ஆம் திகதி) தொடங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வழக்கு விசாரணை தலைநகர் நேபிடாவில் உள்ள நீதிமன்றில் நடைபெறும் எனவும், வாரத்தில் 2 நாள்கள் விசாரணை நடக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங் சான் சூகி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் குறைந்தபட்சம் அவருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும், ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் கூட நாட்டில் அடுத்து நடைபெறும் தேர்தலில் அவரால் போட்டியிட முடியாது எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒரே பிரசவத்தில் 10 குழந்தைகள் பெற்றெடுத்து உலக சாதனை

தென்னாப்பிரிக்கா எகுர்ஹுலேனியைச் சேர்ந்த பெண் ஒருவர் ஒரே நேரத்தில் 10 குழந்தைகளைப் பெற்றெடுத்து உலக சாதனை படைத்து உள்ளார்.

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த பெண் கோசியம் தாமாரா சித்தோல் (வயது 37) இவரது கணவர் டெபோஹோ சோட்டெட்சி. கர்ப்பமாக இருந்த சித்தோல் பிரிட்டோரியா மருத்துவமனையில் சிசேரியன் மூலம் இவர் குழந்தைகளை பெற்றார். இவருக்கு 10 குழந்தைகள் உள்ளது. ஏழு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் பிறந்துள்ளன.

இதுகுறித்து சோட்டெட்சி கூறும்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் உணர்ச்சிவசப்படுகிறேன். என்னால் அதிகம் பேச முடியாது. தயவுசெய்து மீண்டும் பேசலாம் என்று கூறினார்.

சித்தோல், தனது கர்ப்பம் இயற்கையானது என்றும், அவர் கருவுறுதல் சிகிச்சை மூலம் குழந்தை பெறவில்லை என்றும் கூறி உள்ளார்.


சித்தோலின் 10 குழந்தை பிரசவம் உலக சாதனையாக பார்க்கப்படுகிறது. ஹலிமா சிஸ்ஸே என்ற பெண் கடந்த மாதம் மாலியாவில் ஒன்பது குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

கின்னஸ் உலக சாதனை புத்தக செய்தித் தொடர்பாளர் கூறும் போது சித்தோல் 10 குழந்தைகளை பெற்றெடுத்தார் என்ற செய்தியை கின்னஸ் உலக சாதனை அறிந்திருக்கிறது, மேலும் நாங்கள் எங்கள் வாழ்த்துக்களையும் குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்களை அனுப்பி உள்ளோம்.

தற்போதைய நேரத்தில், தாய் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளிப்பதால் இதை நாங்கள் இன்னும் சரிபார்க்கவில்லை. ஒரு சிறப்பு ஆலோசகருடன் எங்கள் குழு இதைப் பற்றி ஆய்வு செய்யும் என்று கூறி உள்ளார்.



## பிரான்ஸ் அதிபர் மெக்ரானை கன்னத்தில் அறைந்த பிரஜை



பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உள்ள டெய்ன் எல் ஹெர்மிடேஜ் நகரில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அதிபர் மெக்ரான் அங்கு சென்றிருந்தார். அதன் ஒரு பகுதியாக அந்த நகரில் உள்ள ஒரு உயர்நிலைப் பாடசாலையில் ஆய்வு செய்வதற்காக சென்றார்.

அப்போது தன்னை வரவேற்க பாடசாலைக்கு வெளியே காத்திருந்த பொது மக்களைச் சந்தித்து கை குலுக்க அவர் மக்கள் கூட்டத்துக்கு அருகே சென்றார். அப்போது கூட்டத்தில் முன்வரிசையில் நின்றிருந்த ஒருவர் திடீரென அதிபர் மெக்ரான் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இதைத்தொடர்ந்து கன்னத்தில் அறைந்த நபரையும் அவருடன் இருந்த மற்றொரு நபரையும் பொலிஸார் கைது செய்தனர். இதனிடையே அதிபர் மெக்ரானை கன்னத்தில் அறையும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

## பாகிஸ்தானில் ஆற்றில் வான் கவிழ்ந்து 17 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் வடக்கு பகுதியில் கில்கிட் – பால்டிஸ்தான் பிராந்தியத்தில் உள்ள சிலாஸ் நகரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் பஞ்சாப் மாகாணம் ராவல்பிண்டி நகருக்கு சுற்றுலா செல்வதற்காக வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்தினர். இதையடுத்து பெண்கள், சிறுவர்கள் உள்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் நேற்று காலை வானில் சுற்றுலா புறப்பட்டனர்.

இந்த வான் கைபர் பக்துங்வா மாகாணத்தில் உள்ள பனிபா நகரில் மலைப்பாங்கான சாலையில் வேகமாக சென்று கொண்டிருந்தது. அப்போது அங்குள்ள ஒரு குறுகலான வளைவில் திரும்பியபோது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வான் சாலையோரம் உள்ள இந்துஸ் ஆற்றில் கவிழ்ந்தது. ஆற்றில் அதிக அளவில் தண்ணீர் ஓடுவதால், சில நொடிகளில் வேன் முற்றிலுமாக நீரில் மூழ்கியது. இந்த கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் மற்றும் வான் சாரதி என 17 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

முருகபூபதி



சார்வாகன் போரின் அழிவைச் சாடினார். மண்டோதரி போரினால் வரக்கூடிய இழப்புகளைச் சொன்னாள். இரண்டு செய்திகளும் மௌனகுருவின் எழுத்திலும் ஆற்றுகையிலும் அழுத்தமாக பதிந்துள்ளன.

# பன்முக ஆளுமையாளர் பேராசிரியர் மௌனகுரு

## இன்று அவருக்கு 78 ஆவது பிறந்த தினம் வாழும் காலத்தில் வாழ்த்துவோம்

நான் இலக்கியப்பிரவேசம் செய்த(1972) காலப்பகுதியில், சென்னை வாசகர் வட்டம் வெளியிட்ட அறுசுவை என்ற ஆறு குறுநாவல்கள் இடம்பெற்ற நூலைப் படித்தேன்.

அதில் சார்வாகன் என்ற பெயரில் ஒருவர் அமரபண்டிதர் என்ற குறுநாவலை எழுதியிருந்தார்.

அவர் ஒரு மருத்துவநிபுணர் என்ற தகவல், நான் ஆஸ்திரேலியாவுக்கு வந்த பின்னர்தான் தெரியும்.

அவர் தொழு நோயாளர்களுக்கு சிறந்த சிகிச்சையளித்தமைக்காக இந்திய அரசினால் பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். எங்கள் மூத்த தமிழ் அறிஞர் கி.லக்ஷ்மண அய்யரின் துணைவியார் பாலம் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர். மெல்பனுக்கு அவர் வந்தபொழுது எனக்கு அறிமுகப்படுத்தினார் திருமதி பாலம் லக்ஷ்மணன்.

சார்வாகன், அவரது இயற்பெயரல்ல. அந்தப் புனைபெயரின் பின்னாலிருந்த கதையை தமிழக சார்வாகனனே சொன்னார்.

மகாபாரதத்தில் குருஷேத்திர களத்தில் கௌரவர்களை அழித்து வெற்றிவாகை சூடிய பாண்டவர்கள், தருமருக்கு பட்டாபிஷேகம் சூட்டும் விழாவில் அந்தச் சபையிலிருந்து எழுந்து, அந்த வெற்றியின் பின்னாலிருக்கும் பேரழி வைச் சுட்டிக்காண்பித்து கடுமையாக விமர்சித்தவர் சார்வாகன் என்ற முனிவர்.



அவரது கூற்றால் வெகுண்டெழுந்த மக்கள் அவரை அடித்தே கொன்றுவிட்டார்களாம். சார்வாக மதம் என்ற புதிய கோட்பாடு உருவானது என்றும், பாஞ்சாலியும் அந்த மார்க்கத்தைப் பின்பற்றினார் எனக் கதை இருப்பதாகவும் சார்வாகன் என்றபுனைபெயரைக்கொண்டிருந்த மருத்துவர் ஸ்ரீனிவாசன் சொன்னபொழுது மகாபாரதத்தின் மற்றுமொரு பக்கத்தை தெரிந்துகொண்டேன்.

துணிவுடன் தனக்கு சரியெனப் பட்டதைச் சொன்ன, சார்வாகன் பற்றிய முழுமையான கதையை பல வருடங்களின் பின்னரே இலக்கியப் பிரதியாக படித்தேன்.

***

09-06-1943 ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்திருக்கும் சின்னையா மௌனகுரு அவர்களைப்பற்றித் தெரிந்தவர்கள், அவர் சார்ந்த நாடகம், கூத்து, விமர்சனம். கல்வி முதலான துறைகளின் ஊடாகத்தான் அவர் பற்றிய பதிவுகளை எழுதுவார்கள். பேசுவார்கள். ஆய்வுசெய்வார்கள்.

ஆனால், அவருக்கும் படைப்பிலக்கிய பக்கம் ஒன்று இருக்கிறது என்பதை கலை - இலக்கிய உலகிற்கு தெரியப்படுத்தியது பேராசிரியரின் மணிவிழாக் காலத்தில் வெளியான மௌனம் என்னும் சிறப்பு மலர்.

2003 ஆம் ஆண்டு வெளியான அந்த மலர் எனது கைக்கு கிடைப்பதற்கு முன்னர் மௌனகுரு எழுதிய சார்வாகன் குறுநாவல் பற்றி சிலர் விதந்து சிறப்பித்து என்னிடம் தொலைபேசி ஊடாகச்சொன்னபொழுது - 2004 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா கன்பரா மாநிலத்தில் நடந்த எமது நான்காவது எழுத்தாளர் விழாவுக்கு வருகைதந்த சகோதரி - சிரேஷ்ட ஊடகவியலாளர் தேவகௌரியிடம் சொல்லி எனக்கு ஒரு பிரதியைத் தருவித்தேன்.

இம்மலருக்கு பதிப்புரையும் அறிமுகவுரையும் எழுதியிருக்கும் பிரதேச செயலாளர் வெ.தவராஜா, அது, ஐந்து பகுதிகளைக் கொண்டது எனக்குறிப்பிட்டு - மலரின் ஐந்தாவது பகுதி பேராசிரியரின் படைப்புகளை உள்ளடக்கியது என்றும், அது அவருடைய இன்னுமொரு பக்கத்தைக் காட்டும் எனவும் குறிப்புணர்த்துவதிலிருந்து, மௌனகுரு ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலும் காத்திரமான பங்களிப்பை வழங்கியவர் என்ற பெரும்பாலானவர்களுக்குத் தெரியாத மற்றும் ஒரு விடயத்தையும் புரிந்துகொள்கின்றோம்.



சார்வாகன் என்ற அவருடைய குறுநாவல் படைப்பிலக்கியத்தில் மிக முக்கியமானதொரு கதை. எழுத்தாளர்கள், வாசகர்கள் அவசியம் படிக்கவேண்டியது.

அண்மைக்காலங்களில் என்னுடன் இலங்கையிலிருந்து தொடர்ச்சியான மின்னஞ்சல் தொடர்பில் இருப்பவர்களில் பேராசிரியர் மௌனகுரு முக்கியமானவர்.

அவருக்கும் எனக்குமான நட்புறவுக்கு நான்கு தசாப்தகாலம் கடந்துவிட்டது. இத்தனைக்கும் நான் அவரது மாணவனும் இல்லை. அவரது அரங்காற்றுகைகளுடன் தொடர்புகொண்டவனுமில்லை. இலக்கியம்தான் எமது பாலம்.

அவர் சித்திரலேகாவை திருமணம் செய்துகொண்ட 1973 காலப்பகுதியில் அவர்களை தம்பதி சமேதராக நான் சந்தித்த இல்லம் கொழும்பில் கலை, இலக்கியவாதிகள் அடிக்கடி சந்திக்கும் ஒரு கலாபவனம் ஆகும்.

அக்காலப்பகுதியில் பாமன்கடையில் ‘அப்பல்லோ’ சுந்தா சுந்தரலிங்கம் - பராசக்தி அக்கா தம்பதியர் தமது மகளுடன் வசித்த அந்த மாடி வீட்டின் ஒரு பகுதியில் கவிஞர் சிவானந்தனும் மற்றும் ஒரு பகுதியில் மௌனகுருவும் சித்திரலேகாவும் இருந்தனர். கவிஞர் முருகையனும் அடிக்கடி அங்கே வருவார். அங்கு கலை, இலக்கிய சந்திப்புகள் நடக்கும். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்டதும் கொழும்பிலிருந்த பலரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு சென்றார் பேராசிரியர் கைலாசபதி. அவ்வாறு மௌனகுருவும் சித்திரலேகாவும் அங்கு இடம்பெயர்ந்து சென்ற பின்னரும் எமக்கிடையிலான நட்புறவு தொடர்ந்தது.

1975 இல் வெளியான எனது முதலாவது சிறுகதைத் தொகுதி ‘சுமையின் பங்காளிகள்’ - மல்லிகைப்பந்தல் சார்பாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்பட்ட வேளையில் வருகை தந்து உரையாற்றி ஷோசலிஸ யதார்த்தப்பார்வை குறித்து தனது பார்வையை சொன்னவர். அவருடனான நட்புறவு நான் புலம்பெயர்ந்துவந்த பின்னரும் இன்று வரையில் நீடிக்கிறது.

எனக்கு மௌனகுருவைப்பற்றி நினைக்கும்தோறு சிறுவயதில் நான் விரும்பி ஓடிய அஞ்சலோட்டம்தான் நினைவுக்கு வருகிறது. மைதானத்தில் ஒருவரால் தொடங்கப்படும் அஞ்சல் ஓட்டம் அந்தக்கோலுக்காக துடிப்போடு காத்து நிற்கும் மற்றவர்களின் தொடர் ஓட்டத்தால் முடித்துவைக்கப்படும். அதே சமயம் மீண்டும் ஓடலாம் என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கும்.

1964 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் உருவாக்கிய இராவணேசன் கூத்தில் தமது பல்கலைக்கழக மாணவப் பருவத்தில் இராவணேசனாக தோன்றிய மௌனகுரு அவர்கள், தொடர்ந்தும் அதனை முன்னெடுத்து வந்தமையுடன் தமது மாணாக்கர்களையும் பயிற்றுவித்து அரங்காற்றுகை நிகழ்த்திவருகிறார். தமது எழுபது வயதிற்குப் பின்னரும் அந்த வேடத்தில் உற்சாகமாக திகழ்ந்தார். இந்த அஞ்சலோட்டம் அரங்காற்றுகையாக தொடர்கிறது. தலைமுறைகள் கடந்தும் பேசப்படுகிறது.

அவரிடம் கல்வித்துறை சார்ந்து பயின்ற எனது மனைவி மாலதிக்கு அவர் மீதுள்ள உயர்ந்த மரியாதையை அவர்பற்றி வீட்டில் நாம் நினைக்கும் வேளைகளில் சொல்வதிலிருந்தும் மெல்பனில் வதியும் இலக்கிய சகோதரி திருமதி ரேணுகா தனஸ்கந்தா தானும் அவருடைய மாணவிதான் எனப்பெருமிதமாகச் சொல்வதிலிருந்தும், அவருடைய மாணாக்கர் மோகனதாசன் தினக்குரலில் எழுதியிருந்த ஒரு கட்டுரையிலி




ருந்தும், மணிவிழா மலரில் அவர் பற்றி பலரும் எழுதியிருக்கும் ஆக்கங்களிலிருந்தும், கிழக்கிலிருந்து இலக்கிய நண்பர் மைக்கல் கொலின் வெளியிட்ட மகுடம் சிறப்புமலரிலிருந்தும் மற்றும் பல ஆக்கங்களிலிருந்தும், அவர் எம்மத்தியில் வாழும் பெறுமதியான மனிதர் என்பதற்கு நிரூபணம் என்றே கருதுகின்றேன்.

மகுடம் சிறப்பிதழில் மௌனகுருவின் நீண்டதொரு நேர்காணல் வெளியாகியிருந்தது.

‘சங்க காலம் முதல் சமகாலம் வரையில்’ என்ற தலைப்பில் இடம்பெற்ற அந்த நேர்காணலில் பேராசிரியர் செ. யோகராசா கேட்டிருந்த கேள்விகளும்இ அதற்கு மௌனகுரு வழங்கிய பதில்களும் கலை, இலக்கிய வாசகர்களுக்கு மிகுந்த பயனைத்தரவல்லவை. மெல்பன் திரும்பியதும் அதனை முழுமையாக படித்துவிட்டு மௌனகுருவுக்கு 22-03-2015 ஆம் திகதி ஒரு மடல் வரைந்தேன். அதில் இவ்வாறு குறிப்பிட்டேன்.

“தங்களின் நேர்காணல் மகுடம் இதழில் வெகு சிறப்பாக வந்துள்ளது. முதலில் தங்களுக்கும் மகுடம் இதழுக்கும் நண்பர் யோகராசாவுக்கும் வாழ்த்துக்கள். நேர்காணலை எவ்வாறு பதிவுசெய்யவேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணமாக தங்களுடனான நேர்காணல் அமைந்திருந்தது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# பன்முக ஆளுமையாளர் பேராசிரியர் மௌனகுரு

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் - மகுடம் போன்ற சிற்றிதழ்களுக்கும் - குறைந்த வாசிப்பு பரப்புக்கும் மாத்திரமே ஏற்றதாக இருக்கும். வெகுஜனபத்திரிகைகளுக்கு இதன் பெறுமதி தெரியாது. சிலவேளை பேராசிரியர் கைலாசபதி இருந்திருப்பின் -அவர் ஏதும் பத்திரிகையில் பணியாற்றியிருப்பின் இதுபோன்ற நேர்காணல் சாத்தியம்.

இல்லையேல் தொடக்கத்திலும் இடையிலும் முடிவிலும் வெட்டிக்கொத்தி அரைகுறையாக பிரசுரித்திருப்பார்கள். பக்கப்பிரச்சினை என்று சமாதானம் கூறுவார்கள். நீங்கள் பல விடயங்களை மனம் திறந்து சொல்லியிருக்கிறீர்கள். அத்துடன் எவரையும் காயப்படுத்தாமல் கண்ணியமாக சொல்லியிருக்கிறீர்கள். இந்த நேர்காணல் பரவலான வாசிப்புக்கு அனுப்பப்படல் வேண்டும். ஏதும் இணைய இதழ்களில் மறுபிரசுரம் செய்வதற்கு ஆவன செய்யுங்கள்.

புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத் தமிழ் பற்றியும் சொல்லியிருந்தீர்கள். மெத்தச்சரியான கூற்று. மொழிபெயர்ப்பு பற்றியும் சொல்லியிருந்தீர்கள். அது பற்றி இன்னும் மேலும் நீங்கள் சொல்லியிருக்கலாம் போலத்தோன்றியது. மொத்தத்தில் அந்த நேர்காணல் எனது மனதுக்கு நிறைவானது."

பின்னர் குறிப்பிட்ட நீண்ட நேர்காணல் தனி நூலாக மட்டக்களப்பில் பேராசிரியரின் கடந்து சென்ற ஒரு பிறந்த தினத்தின்போது வெளியிடப்பட்டிருக்கிறது.


அவரது ஆற்றுகையிலிருந்தும் ஒரு பெயரை ஆஸ்திரேலியா இரவல் வாங்கியிருக்கிறது என்பதையும் இங்கு சொல்லத்தான் வேண்டும்.

அவர் இலங்கையில் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி மாணாக்கர்களுக்காக எழுதி இயக்கியது 'வேடனை உச்சிய வெள்ளைப்புறாக்கள்'. எமக்கு நன்கு தெரிந்த ஒற்றுமையை வலியுறுத்தும் கதைதான். மௌனகுரு அதனை எவ்வாறு அரங்காற்றினார் என்பது தெரியாமலேயே அந்தப்பெயரை தலைப்பாகக்கொண்டு சிட்னி கலைஞர் சந்திரஹாசன், ஒரு கவிதை நாடகம் எழுதினார். அதில் ( மெல்பனில்) எனது பிள்ளைகளும் நண்பர்களின் பிள்ளைகளும் நடித்தனர். ஆனால், இந்தத்தகவல் மௌனகுரு அறிவாரா...? என்பது எனக்குத்தெரியவில்லை.

வழக்கமாக நாம் நாட்டுக்கூத்து என்றே அழைக்கின்றோம். ஆனால் அப்படியல்ல. கூத்து என்றே எழுதுங்கள், பேசுங்கள் என்று எம்மைத் திருத்தியவர் அவர்.

எப்படி சார்வாகன் ஊடாக சமூகத்துக்கு ஒரு செய்தியை சொன்னாரோ, அதுபோன்று இராவணேசன் மனைவி மண்டோதரி ஊடாகவும் சமூகத்துக்கு முக்கியமான செய்தியை வெளியிட்டார்.

சார்வாகன் போரின் அழிவைச் சாடினார். மண்டோதரி போரினால் வரக்கூடிய இழப்புகளைச் சொன்னாள். இரண்டு செய்திகளும் மௌனகுருவின் எழுத்திலும் ஆற்றுகையிலும் அழுத்தமாக பதிந்துள்ளன.



கொழும்பில் அமரர் நீலன் திருச்செல்வம் நினைவு அமைப்பினருக்காக அவர் இராவணேசனை மீண்டும் 2010 இல் நவீனப்படுத்தி அரங்கேற்றினார். அதன் பின்னால் பலருடைய உழைப்பு இருந்ததையும் அவர் சுட்டிக்காட்டி மேடையில் அவர்களை அறிமுகப்படுத்தினார். சுமார் இரண்டு மணிநேரங்கள் இடம்பெறும் இராவணேசன் சிறந்த ஒளிப்பதிவுடன் எமக்கு இறுவட்டாக கிடைத்துள்ளது. அத்துடன் மௌனகுரு தமது 70 வயதில் பங்கேற்ற இராவணேசனும் மண்டோதரியும் சந்திக்கும் இறுதிக்காட்சி சுமார் இருபது நிமிடங்கள். இரண்டையும்பார்க்கும்சந்தர்ப்பம்ஆஸ்திரேலியாவில் பலருக்கும் கிடைத்தது.

1964 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் அஞ்சலோட்டமாகவேதொடர்ந்துவருகிறான்இராவணேசன். அந்தத் தொடர் ஓட்டத்தில் பேராசிரியர் மௌனகுருவின் அயராத உழைப்பினைக் காண்கின்றோம்.

நாட்டுக்கூத்தை, கூத்து என்றே அழையுங்கள் எனச்சொல்லிவரும்மௌனகுரு, தமதுநாடகங்களிலும் பாரதியின் பல கவிதை வரிகளை இடம்பெறச்செய்துள்ளார். இவரது மழை என்னும் நாட்டிய நாடகத்தில், 'திக்குகள் எட்டும் சிதறி தக்கத்தீம் தரிகிடதீம் ' எனத் தொடங்கும் மழைப்பாடலை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளார்.

மழையைக் காணாத மக்கள் வறட்சியினால் வாழ்த் துன்பப்படுகிறார்கள். இறுதியில் நம்பிக்கையின் அடிப்படையில் யாகம் முதலான நிகழ்த்துகையின் மூலம் மழையை வரவழைக்க முயற்சிக்கிறார்கள். பின்னர் சுயமுயற்சியால் மழையை கொணர்கிறார்கள். அந் தக்காட்சிக்கு பாரதியின் பின்வரும் கவிதை வரிகளை பயன்படுத்தியிருக்கிறார்.

**"வெட்டியடிக்குது மின்னல் - கடல்**
**வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது;**
**கொட்டியிடிக்குது மேகம் - கூ**
**கூவென்று விண்ணைக் குடையுது காற்று;**
**சட்டச் சட சட்டச்சட டட்டா......."**

மௌனகுரு அவர்களின் தகவல்களின் பிரகாரம் இந்நாடகம் இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமன்றி நோர்வேயிலும் மேடையேறியிருக்கிறது.

மௌனகுரு தயாரித்து இயக்கிய 'நம்மைப் பிடித்த பிசாசுகள்' என்னும் நாடகத்திலும் பாரதி ஒரு கதாபாத்திரம். இதில் பாரதி சிலை உயிர் பெறுகிறது. இலங்கைத் தமிழர் சமூகத்தில் நடக்கும் பிரதேச வாதம், பெண் அடக்குமுறை,சீதனப் பிரச்சினை, அந்நிய மோகம் என்ற பிசாசுகளைப் பாரதி காண்கிறார். நம்மை பிடித்த இப்பிசாசுகளை அடித்துக் கலைக்குமாறு பாரதி மக்களுக்கு ஆணையிடுகிறார் .

ஒரு கட்டத்தில், 'இவற்றைச் செய்ய உன்னால் முடியாவிட்டால் செத்துப்போ... அதுவே நன்று' என உறுக்குகின்றார் விழிப்புணர்வு பெற்ற மக்கள் பாரதியின் 'ஜெயபேரிகை கொட்டடா... கொட்டடா... 'என்ற அந்த விடுதலைக் கீதத்தை இசைத்தபடி பிசாசுகளை விரட்டி விடுதலைக் கூத்தாடுகிறார்கள்.

மழை என்ற மௌனகுருவின் நாடக நூலுக்கு, இலங்கையின் மூத்த கவிஞர் (அமரர்) இ.முருகையன் எழுதியிருக்கும் முன்னுரையில், 'இப்புத்தகத்தில் வரும் இன்னுமொரு நாடகம் 'நம்மைப் பிடித்த பிசாசுகள்'. அந்நியநாட்டு மோகம், பிரதேச பேதங்கள், உத்தியோக மோகம், சீதனம் எனும் சின்னத்தனம் ஆகிய சமூகக் குறைபாடுகள் எல்லாவற்றையும் பிசாசுகளாக உருவகம் செய்கிறார். இவற்றினால் மக்கள் பலர் உருவேறி ஆடுகிறார்கள்.

ஆனால், இந்தப் பிசாசுகளின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கு பாரதியார் சொல்லும் ஒரு மந்திரம் உதவுகிறது. அந்த மந்திரம் ஒரு பாட்டு.

**அச்சமில்லை அமுங்குதலில்லை**
**நடுங்குதலில்லை நாணுதலில்லை**
**பாவமில்லை பதுங்குதலில்லை**
**ஏது நேரினுமு இடர்ப்பட மாட்டோம்**
**அண்டம் சிதறினால் அஞ்ச மாட்டோம்**
**கடல் பொங்கி எழுந்தால் கலங்கமாட்டோம்**
**யார்க்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்**
**எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்**

- இன்னும் மந்திரங்கள் பல ஓதப்படுகின்றன. அவை எல்லாம் பாரதி பாட்டுக்களே.

நம்மைப் பிடித்த பிசாசுகளில் பாரதியார் சொற்களும் கருத்துக்களும் உணர்வோட்டங்களும் தாராளமாக இடம் பெற்றுள்ளன. மௌனகுருவின் ஆக்கங்களில் பாரதியாரின் செல்வாக்குக் கணிசமாக மேலோங்கி நிற்பதைக் காணுகின்றோம். பாரதியின் ஆளுமையின் ஆட்சித்திறன் என்று இதனை விவரிக்கலாம்.

இலங்கையில் நாடகம், கூத்து முதலானவற்றில் பாரதியின் கவிதைகள் முக்கிய பங்காற்றியிருக்கின்றன என்பதற்கு மௌனகுருவின் முயற்சிகள் பதச்சோறு. தொடர்ந்தும் பாரதியின் ஊற்றெடுக்கும் சிந்தனைகளை தமது கலைப்படைப்புகளில் பயன்படுத்திவருகிறார்.

மௌனகுருவின் மற்றும் ஒரு நாடகமான வனவாசத்திலும் துரியோதனன் சபையில் நடக்கும் சூதாட்டக் காட்சியிலும் பாரதியின் பாஞ்சாலி சபதத்திலிருந்து கவிதை வரிகளை எடுத்தாளவிருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார். இவரது சக்தி பிறக்குது, காளிக்கூத்து நாட்டிய நாடகம் ஆகியனவற்றிலும் பாரதியின் வரிகள் இடம்பெறுகின்றன.

எண்பது வயதை நெருங்கும் இக்காலப்பகுதியிலும் அயர்ச்சியின்றி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் அரங்காற்றுகைகளிலும், சமகாலத்தில் இடம்பெற்று வரும் இணையவெளி அரங்குகளிலும் மௌனகுரு பங்கேற்று வருகிறார். தொடர்ந்தும் முகநூல் வழியாக பல கட்டுரைகளை எழுதிவருகிறார்.

அவரது இந்த இயல்பு பலருக்கும் முன்மாதிரியானது. அவர் நல்லாரோக்கியத்துடன் மேலும் பல்லாண்டு வாழ்ந்து அரங்காற்றுகைகளில் மேலும் பல மாணாக்கர்களை உருவாக்குவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துகின்றோம்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிழக்கு மாகாணத்துக்கு தேவையான தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் நாமல் அறிவிப்பு

கொவிட் தடுப்பூசிகள் விநியோகிக்கப்படும் பொதுச் சுகாதார வலயங்கள் மற்றும் கிராமசேவகர் பிரிவுகள் தீர்மானிக்கப்படுவது சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் புள்ளிவிவரங்களின் அடிப்படையிலாகும். அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்துக்கு தேவையான தடுப்பூசிகள் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் தமிழ்த் தேசியக் கட்டமைப்பு உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் உரையாற்றுகையில், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு கொவிட் தடுப்பூசி கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

ஆனால் கல்முனை பிரதேசத்துக்கு ஒரு தடுப்பூசியும் கிடைக்கவில்லை. அதுதொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என கேட்டுக்கொண்டதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்நாமல்ராஜபக்ஷ தொடர்ந்து குறிப்பிடுகையில்,

கொவிட் தடுப்பூசி விநியோகிக்கப்படும் பொதுச் சுகாதார வலயங்கள் மற்றும் கிராமசேவகர் பிரிவுகள் தீர்மானிக்கப்படுவது சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் புள்ளிவிவரங்களின் அடிப்படையிலாகும். அதன் பிரகாரம் குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு தடுப்பூசி விநியோகிக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் மேல் மாகாணத்தில் கொவிட் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்குதல் கிழக்கு மாகாணத்தில் கொவிட் முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் அடுத்த வாரத்தில், மேலும் 10 லட்சம் தடுப்பூசிகள் நாட்டுக்கு வர இருக்கின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவை கிடைத்தவுடன் தேவையான மாவட்டங்களுக்கு, சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் விநியோகிக்க நடவடிக்கை எடுப்போம்.



அதேபோன்று சுகாதார துறையினரின் ஆலோசனைக்கமைய, முதலீட்டு வர்த்தக வலயங்கள், புடைவை தொழிற்சாலை ஊழியர்களுக்கு விசேட வேலைத் திட்டத்தின் கீழ் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுத்துவருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் கைது



மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய புலனாய்வு குழுவினர் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது கசிப்பு உற்பத்தி செய்கையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கசிப்பு தயார் செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த 40 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்துள்ளார் .

நாட்டில் தொடர்ச்சியான பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அனைத்து மதுபான சாலைகளும் மூடப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட சில பகுதிகளில் சட்டவிரோத மது பான தயாரிப்புக்கள் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் போதைவஸ்து பாவனை மற்றும் போதைப்பொருள் விற்பனை தொடர்பில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க முன்னெடுத்துள்ள நடவடிக்கையின் கீழ் மாவட்ட குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமத்துக்கு 2.5 லட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன




(ஹஸ்பர் ஏ ஹலீம்)

தம்பலகாமம் பிரதேச செயலாளரது வேண்டுகோளுக்கு அமைய, அப்பிரதேச செயலாளர் பிரிவில் கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பொருட்டாக 250,000 பெறுமதியான உலர் உணவுப் பொருள்களைத் கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியது.

கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கப் பொறுப்பாளர் உலர் உணவுப் பொருள்களைத் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி சிறீபதியிடம் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் வைத்துக் கையளித்தார்.

இதற்கான அனுசரணையைக் கனடா திருகோணமலை நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் வழங்கி இருந்தனர் குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரதம முகாமைத்து உதவியாளர் மஹிந்த வனசிங்க பங்கேற்றார்.

# மூன்று இடங்களில் கொரோனா தடுப்பூசி



மட்டக்களப்பில் இன்று மண்முனைப் பற்று வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மூன்று இடங்களில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மண்முனைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயம், திருச்செந்தூர் விபுலானந்தா வித்தியாலயம், நாவற்குடா கிழக்கு சாரதா வித்தியாலயம் ஆகிய இடங்களில் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு மேற்படி கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

குறித்த தடுப்பூசி வழங்கும் திட்டத்தை மட்டக்களப்பு மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் தலைவரும் அரசாங்க அதிபருமான கே.கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் இராணுவ பிரதானி 23ஆம் படைப்பிரிவின் கொமாண்டர் மேஜர் ஜெனரல் நளின் கொஸ்வத்த, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

# நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 186 பேருக்குத் கொரோனாத் தொற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 186 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதுடன் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

கொரோனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நி லையில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் உட்பட 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

நேற்றைய தொற்றாளர்கள் விவரத்தில்

மட்டக்களப்பு – 33,களுவாஞ்சிகுடி – 14,வாழைச்சேனை – 05, காத்தான்குடி – 20, கோறளைப்பற்று – 21, ஓட்டமாவடி – 31, செங்கலடி – 01, ஏறாவூர் – 27, பட்டிருப்பு – 16, வவுணதீவு – 03, ஆரையம்பதி – 03, கிரான் – 03 பேர் என்ற வகையிலும் பொலிஸ் உத்தியோகத்தர் – 03 பேரும் சிறைச்சாலை கைதிகள் – 07 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் .

# கல்முனை பிரதேசத்துக்கும் தடுப்பூசி வழங்க நடவடிக்கை

அம்பாறை மாவட்ட கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்கு கொரோனாத் தடுப்பூசி வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினை சுட்டிக்காட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் ஆகியோர் நேற்று (8) பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினர்.

மேலும் இக்கலந்துரையாடலில் கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இக்காலத்தில் 06 கொரோனா மரணங்களும் அதிகளவான தொற்றாளர்களும் இணங்காணப்பட்டு வருகின்றனர் எனவே இந்நிலையினை கருத்தில் கொண்டு கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்கான வக்சின் தடுப்பூசியை வழங்க விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமரைக் கேட்டுக் கொண்டனர்.

இந்த கோரிக்கையினை ஏற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தடுப்பூசி வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமனவுக்கு பணிப்புரை விடுத்தார். அதற்கமைய சன்ன ஜயசுமன சுகாதாரதுறை அதிகாரிகளினை உடனடியாக தொடர்பு கொண்டு கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கான தடுப்பூசிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்மெட்டியாவ வடக்கு ஈச்சங்குளம் பகுதியில் இறந்த நிலையில் யானையின் உடலம் மீட்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ வடக்கு ஈச்சங்குளம் காட்டுப் பகுதியை அண்டிய பகுதியில் யானை ஒன்று இறந்து கிடப்பதாக நேற்று மாலை பொலிஸார் தெரிவித்தனர்.

அது சுமார் 30 - 35 வயது மதிக்கத்தக்க ஆண் கொம்பன் யானை எனவும் எட்டு அடி உயரம் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே வேளை குறித்த யானையானது இரு வாரங்களுக்கு முன்னர் பன்றிக்கு வைக்கும் சோள வெடியை உட்கொண்டு தொண்டையில் சிக்கியதன் காரணமாக உணவு சாப்பிட முடியாது இறந்திருக்கலாம் என வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். இரண்டரை அடி நீளம் கொண்ட தந்தத்தை உடைய இந்த யானை அப்பகுதியில் நடமாடியதாகவும் மக்கள் தெரிவித்தனர். யானையின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் மகளிர் பிரிவு அரையிறுதிக்கு முன்னேறினார் ஸிடன்செக்!

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் பாரிஸில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் உலகத் தரவரிசையில் 85 ஆவது இடம் வகிக்கும் சுலோவேனியாவின் தமரா ஸிடன்செக் 7 – 5, 4 – 6, 8 – 6 என்ற செட் கணக்கில் 35 ஆம் நிலை வீராங் கனையான ஸ்பெயினின் பாலா படோசாவை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சுலோவேனியா நாட்டவர் ஒருவர் அரையிறுதியை எட்டியிருப்பது இதுவே முதல்முறையாகும்.

மற்றொரு ஆட்டத்தில் 32 ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் அனஸ்டசியா பாவ்லிசென்கோவா 6 –7 (2–7), 6–2, 9–7 என்ற செட் கணக்கில் கஸகஸ்தான் நாட்டின் எலினா ரைபகினாவை வீழ்த்தி அரையிறுதியை எட்டினார். விறுவிறுப்பான இந்த ஆட்டம் 2 மணித்தியாலங்கள் 33 நிமிடங்கள் வரை நீடித்தது. கிராண்ட்ஸ்லாமில் முதல் முறையாக அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்துள்ள 29 வயதான அனஸ்டசியா பாவ்லிசென்கோவா அடுத்து 23 வயதான ஸிடன்செக்குடன் மோதுகிறார்.

நேற்று முன்தினம் இரவு நடந்த 4 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 9 ஆம் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான போலந்தின் இகா ஸ்வியாடெக் 6 – 3, 6 – 4 என்ற நேர் செட்டில் உக்ரைனின் மார்டா கோஸ்டியுக்கை வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

## டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்காக பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியது அமெரிக்கா

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த வருடம் நடக்கவிருந்த ஒலிம்பிக் போட்டி கொரோனா பரவலால் இந்த வருடத்துக்கு ஒத்திவைக் கப்பட்டது. அதனை வருகிற ஜுலை 23 தொடங்கி ஓகஸ்ட் 8 வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாரா லிம்பிக் போட்டிகள் ஓகஸ்ட் 24 தொடங்கி செப்டெம்பர் 5 வரை நடைபெறும்.

ஒலிம்பிக்போட்டிகளை முன்னிட்டு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்களும் உத்தியோகத்தர்களும் தங்களது நாடுகளில் இருந்து ஜப்பானுக்குப் பயணம் மேற்கொள்ளவிருக் கின்றனர். இந்த நிலையில், கடந்த மே 25 ஆம் திகதி அமெரிக்க அரசு வெளியிட்ட அறிவிப்பில், கொரோனா பாதிப்பு எண்ணிக்கை உயர்வடைவதை முன்னிட்டு ஜப்பானுக்கு அமெரிக்கக் குடிமக்கள் பயணம் செய்ய வேண்டாம் என அறிவுறுத்தியிருந்தது. இதனால், அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது, அமெரிக்காவினூடாகப் பயணிப்போருக்கும் சிக்கல் எழுந்தது.

ஆயினும், ஜப்பானில் நடைபெறவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு தனது பயணக் கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தி அறிவித்துள்ளது. அந்த அறிவிப்பில், ஜப்பானுக்குச் செல்வதற்கு முன் தங்களுடைய சுகாதார நலன் சார்ந்த விடயங்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களுடன், அமெரிக்க மக்கள் ஆலோசித்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டில் கொரோனா பாதிப்புகள் அதிகளவில் காணப்படும் நிலையில் அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், மூன்றாம் நிலைப்பயண சுகாதார அறிவிப்பை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இது பற்றியும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் நோய்த் தொற்றுள்ள நபர்களிடம் தொடர்பு கொள்ளாமல் தவிர்ப்பது நலம் என்றும் தனது குடிமக்களுக்கு அமெரிக்கா அறிவுறுத்தி உள்ளது.







## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான நடுவர்கள் விவரம் அறிவிப்பு

இந்தியா – நியூசிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியின் கள நடுவர்களாக ரிச்சர்ட் இல்லிங்வொர்த் மற்றும் மைக்கல் கோஃப் செயல்படுவார்கள் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது,

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இங்கிலாந்தின் சவுத்தாம்டன் நகரில் ஜூன் 18 முதல் 22 வரை நடைபெறவுள்ளது. இதற்காக மும்பையில் இருந்து தனி விமானம் மூலம் இங்கிலாந்து சென்ற இந்திய அணியினர் பாதுகாப்பு வளைய விதிமுறையின் கீழ் தங்களைத் தனிமைப்படுத்தி கொண்டுள்ளனர். விரைவில் இந்திய வீரர்கள் சவுத்தாம்டன் மைதானத்தில் பயிற்சி மேற்கொள்ளவிருக்கின்றனர். நியூசிலாந்து தற்போது 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியோடு விளையாடிவருகிறது.

இந்த நிலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இறுதிப் போட்டிக்குகள நடுவர்களாக இங்கிலாந்தைச் சேர்ந்த ரிச்சர்ட் இல்லிங்வொர்த் மற்றும் மைக்கல் கோஃப் இருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இரு நடுவர்களும் ஐ.சி.சியின் எலைட் குழுவில் இருப்பவர்கள். இதில் ரிச்சர்ட் இல்லிங்வொர்த் 53 டெஸ்ட் போட்டிகளிலும், மைக்கல் கோஃப் 19 டெஸ்ட் போட்டிகளிலும் நடுவர்களாகப் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர்கள். இந்தப் போட்டியின் ஆட்ட நடுவராக கிறிஸ் பிரோட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொரோனாப் பரவல் காரணமாக வெளிநாடுகளில் இருந்து நடுவர்களை நியமிப்பதற்குப் பதிலாக, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நடுவர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என ஐ.சி.சி. தகவல் வழங்கியுள்ளது. போட்டி நடுவர்களும் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டே செயல்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் கேன் வில்லியம்சன் விளையாடுவது சந்தேகம்!



தனது இடது முழங்கையில் ஏற்பட்ட காயத்தினால் நியூசிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் கேன் வில்லியம்சன் பல மாதங்களாக அவதியுற்று வருகிறார். இதனால்தான் அவரது துடுப்பாட்டமும் அண்மைய நாள்களில் சரியாக அமையவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் எட்ஜ்பாஸ்டனில் நாளை ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடமாட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவுக்கு எதிராக ஜூன் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குள் கேன் வில்லியம்சன் காயத்திலிருந்து மீண்டு விளையாடுவாரா என்பது குறித்தும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. கேன் வில்லியம்சன் விளையாட முடியாத நிலை ஏற்படுமானால், அவருக்குப் பதிலாக வில் யங் அணியில் இடம்பெறுவார் என்று தெரிகிறது.

இதேவேளை, காயம் காரணமாக முதலாவது போட்டியில் விளையாடாமல் ஓய்விலிருந்த இடது கை வேகப்பந்து வீச்சாளர் ட்ரெண்ட் போல்ட், இரண்டாவது டெஸ்ட்டுக்குத் தயாராகி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ட்ரெண்ட் போல்ட் வருகையினால் டிம் சவுத்தி, கைல் ஜேமிசன், நீல் வாக்னர் என்று நியூசிலாந்து பந்துவீச்சு மிகப் பலமிக்கதாக மாறுகிறது. இந்தியாவுக்கு எதிரான போட்டியை மனதில் கொண்டு இவர்களில் யாராவது ஒருவருக்கு ஓய்வு வழங்கப்பட்டு மட் ஹென்றி அணிக்குள் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## யூரோ 2020 கால்பந்தாட்டத் தொடர் பயிற்சிப் போட்டியில் பிரான்ஸ் வென்றது

பிரான்ஸில் நடைபெற்ற யூரோ 2020 கிண்ணக் கால்பந்து தொடருக்கான பயிற்சி நட்புமுறை ஆட்டத்தில் உலகச் சம்பியனான பிரான்ஸ் அணி பல்கேரியாவை 3 – 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியுள்ளது.

யூரோ 2020 கால்பந்து தொடர் வரும் 11 ஆம் திகதி துருக்கி – இத்தாலி அணிகளின் போட்டியோடு ஆரம்பமாகவுள்ளது. 24 ஐரோப்பிய அணிகள் 6 பிரிவுகளில் 4 அணிகள் வீதம் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொடருக்கான பயிற்சி ஆட்டங்களில் அணிகள் ஈடுபட்டு வரும் நிலையில், நேற்று நடைபெற்ற போட்டியொன்றிலேயே பிரான்ஸ் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது. யூரோ கால்பந்துத் தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்படும் பிரான்ஸ் நட்சத்திரமான அன்டுவன் கிரீஸ்மன் முதல் கோலையே அசத்தலாக அடித்து அணியின் வெற்றிப் பயணத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகள் பரப்பினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் பிடியாணையின்றி கைது

## பொலிஸார் கடும் எச்சரிக்கை

சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகளைப் பகிர்வதைத் தவிர்க்குமாறும் அவ்வாறு செய்பவர்கள் பிடியாணை இன்றி கைது செய்யப்படலாம் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது தண்டனைச் சட்டத்தின் 120, 286, 286 ஏ, 291 ஏ, 291 பி, 345, 365 டி, 402, 403, மற்றும் 486 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்யப்படலாம் என்றும் பொலிஸ் அறிவித்துள்ளது.

தண்டனைச் சட்டம், 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் பிரிவு 3, கணினி குற்றச் சட்டத்தின் பிரிவு 06, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 02 மற்றும் 03, 1979 ஆம் ஆண்டின் 48, மற்றும் 1927 ஆம் ஆண்டின் 04 என்ற ஆபாச வெளியீடுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்றும் அறிவித்துள்ளது.

சமூக ஊடகங்களில் தவறான செய்திகளைப் பரப்புவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசேட அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டு ஒரு நாளின் பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் போலியான செய்திகளைப் பகிர்ந்தமைக்காக அண்மையில் கைது செய்யப்பட்ட ஒருவர், குறித்த தண்டனை சட்டக்கோவைக்கு அமைய கைது செய்யப்பட்டார் எனவும் பின்னர் 2 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலிச் செய்தி பகிர்விற்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஒரு புதிய பிரிவு அமைக்கப்படும் என்ற பொலிஸாரின் அறிவிப்பிற்கு அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் உட்பட பலரால் விமர்சிக்கப்பட்டது.

குறிப்பாக இந்த நடவடிக்கை ஆபத்தானது மற்றும் அரசியல் ரீதியாக ஆரோக்கியமற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 65 லட்சம் ரூபா பெறுமதியிலான பி.சி.ஆர். இயந்திரம் தியத்தலாவ வைத்தியசாலைக்கு பிரதமரால் வழங்கல்



இந்திய நிறு டயமன்ட் கடர்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி சஞ்சய பேட்டால் கொவிட் - 19 தொற்றை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில்பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடந்த திங்கட்கிழமை அலரி மாளிகையில் வைத்து 65 லட்சம் ரூபா மதிப்பிலான பி.சி.ஆர். இயந்திரமொன்று வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் அவர்களின் ஒருங்கிணைப்புடன் இந்த பி.சி.ஆர். இயந்திரம் வழங்கிவைக்கப்பட்டது. அதற்கமைய பி.சி.ஆர். இயந்திரத்தை சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுக்கமைய தியத்தலாவ வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

கொவிட் - 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு தனியார் துறையிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பை பிரதமர் இதன்போது பாராட்டினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான், நிறு டயமன்ட் கடர்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி சஞ்சய பேட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சவால்கள் வரட்டும் பரவாயில்லை நீங்கள் கடமையைச் செய்யுங்கள்

## ஜனாதிபதி உத்தரவு



கொழும்பு, ஜூன் 09

இயற்கை உரத்தைப் பயன்படுத்துவதில் சவால்கள் காணப்பட்டாலும், மக்களின் நலனுக்காக முன்னோக்கிச் செல்ல வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவர்களுடன் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இயற்கை உரங்களை பயன்படுத்துவதில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்றும், சில தரப்பினர் இதை விமர்சித்தாலும் எதிர்கால சந்ததியினருக்காக இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்த தலைமுறைக்கு இதன் அவசியத்தை எடுத்துச் செல்ல வேண்டும், இது உலகத்திற்கோ அல்லது நாட்டுக்கோ தீங்கானது அல்ல என்பதால் எவ்வித சவால்கள் காணப்பட்டாலும் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள் என ஜனாதிபதி அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

வேளாண்மையில் இயற்கை உரத்தை பயன்படுத்துவதற்கான முடிவை அரசாங்கம் அவசரமாக எடுக்கவில்லை என்றும், இது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு கொள்கை அறிக்கையிலும் வரவு செலவுத்திட்டத்திலும் முன்வைக்கப்பட்டது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# பூதன்வயல் வேம்படி நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழாவில் ஐவர் மட்டுமே அனுமதி

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - பூதன்வயல் பகுதியில் அமைந்துள்ள, அருள் மிகு வேம்படி நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை ஐவரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

குறிப்பாக இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவில் வருடாவருடம் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொள்கின்றமையுடன், அவ்வாறு ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் காவடி, பாற்செம்பு, தூக்குக்காவடி, தீக்காவடி உள்ளிட்ட நேர்த்திகடன்களையும் மேற்கொள்வார்கள்.

இவ்வாறாக மிகச் சிறப்பான முறையில் பொங்கல்வழிபாடுகள் இடம்பெறும்.

இந் நிலையில் தற்போதுள்ள கொவிட் - 19 அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, இந்த வருட பொங்கல் விழாவானது ஐந்துபேரின் பங்குபற்றுதலுடன், சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்பட்டு அமைதியான முறையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். பல்கலை நுண்கலைப் பீட தெரிவு பரீட்சை இணையவழியில்

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நுண்கலைமாணி (பரதம்), நுண்கலைமாணி (சங்கீதம்), நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) ஆகிய நான்கு வருடக் கற்கை நெறிகளின் 2020/2021 ஆம் கல்வியாண்டுக்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் இணைய வழியாக இடம்பெறவுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கேற்ப அனுமதி / தெரிவுப் பரீட்சைகளை மாற்று ஏற்பாட்டின் படி இணைய வழியாக நடத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுடனான கூட்டத்தின் பின்னர் தீர்மானித்துள்ளது.

அந்தத் தீர்மானத்துக்கு அமைய யாழ். பல்கலைக்கழகத்தால் நுண்கலைமாணி (பரதம்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும், நுண்கலைமாணி (சங்கீதம்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமையும் ஆரம்பமாகவுள்ளன.

# கொழும்பு, கம்பஹா, குருநாகல், மட்டக்களப்பு கோவிட் தொற்றாளர்கள் தொடர்ந்தும் அதிகரிப்பு

இலங்கையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பதிவான கொரோனா நோயாளிகள் தொடர்பான மாவட்ட ரீதியிலான தகவலை கொரோனா கட்டுப்பட்டு நிலையம் அறிவித்துள்ளது.

அதன்படி அதிகளவிலான நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர் எனவும் குறித்த தரவுகள் காட்டுகின்றன.

அந்தவகையில் கொழும்பில் 602, கம்பஹா 434, குருநாகல் 270, மட்டக்களப்பு 222, நுவரெலியா மற்றும் இரத்தினபுரியில் தலா 119 பேரும் களுத்துறை 113, கண்டியில் 99 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காலி 89, கேகாலை மற்றும் அம்பாந்தோட்டையில் தலா 65, யாழ்ப்பாணம் 63, திருகோணமலை 58, மாத்தளை 54, அநுராதபுரம் 54, வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்பிய 45 பேரும் இதில் அடங்குகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சியில் 39 பேர், பதுளை மற்றும் மாத்தறையில் 35 பேர், மொனராகலை 33, அம்பாறை 25, வவுனியா 14, முல்லைத்தீவு 11, மன்னார் 9, புத்தளம் 7, பொலன்னறுவையில் 4 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.06.2021இல் வெளியிடப்பெற்றது.